சுருக்கம்

மறுவாழ்வு இயக்குநரகம் – வெளிநாடுவாழ் தமிழர்கள் பிரச்சினை மற்றும் பல்வேறு தேவைகளை நிர்வகிக்க "வெளிநாடுவாழ் தமிழர்கள் நல வாரியம்" ஒன்று அமைத்தல் மற்றும் மறுவாழ்வுத் துறை இயக்குநரகத்தை அகதிகள் மறுவாழ்வு மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நல ஆணையரகம் என பெயர் மாற்றம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொது (மறு வாழ்வு–1)த் துறை

அரசு ஆணை(நிலை) எண். 1141

நாள்: 13.12.2010
கார்த்திகை – 27,
திருவள்ளுவர் ஆண்டு – 2041

ஆணை:

வெளி நாட்டில் வாழும் தமிழர்களின் நலனுக்காக கேரள மாநிலத்தில் இருப்பது போன்று ஒரு நல வாரியம் தமிழ்நாட்டில் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளது. வெளிநாடுவாழ் கேரள மக்களின் நலனுக்காக, வெளிநாடுவாழ் கேரள மக்களுக்கான நலத்துறை (Department of Non-Resident Keralites Affairs- NORKA) கேரள அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து வெளிநாடுவாழ் கேரள மக்களின் நலச்சட்டம் 2008–இல் ஏற்படுத்தப்பட்டு இச்சட்டத்தின் அடிப்படையில் வெளிநாடுவாழ் கேரள மக்களின் குறைகளை களைய நலநிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டு, வெளிநாடுவாழ் கேரள மக்கள் நல வாரியம் மூலம் நலத் திட்டங்கள் செயல்படுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. கேரள அரசின் மேற்படி செயல்பாடுகளை ஆய்வு செய்ததில் தமிழ்நாட்டிலும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நல வாரியம் ஒன்று அமைத்திட ஏதுவாக நிர்வாகப் பிரிவு ஒன்று மறுவாழ்வுத் துறை இயக்குநரகத்தில் ஏற்படுத்திடவும், அதன் மூலம் கேரள மாநிலத்தில் இருப்பதுபோன்று, வெளிநாடுவாழ் கேரள மக்களுக்கான நலத்துறை, வெளிநாடுவாழ் கேரள மக்கள் நலச்சட்டம், வெளிநாடுவாழ் கேரள மக்கள் நல வாரியம் போன்ற அமைப்புகளை, வெளிநாடுவாழ் தமிழர் நலனுக்காக தமிழ் நாட்டில் ஏற்படுத்திடவும் முடிவு செய்து முழுமையான பரிசீலனைக்குப் பின்னர், பின்வரும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. வெளிநாடுவாழ் தமிழர்கள் பிரச்சினை மற்றும் பல்வேறு தேவைகளை நிர்வகிக்க ஏதுவாக சென்னையில் உள்ள மறுவாழ்வுத் துறை இயக்குநரகத்தில் வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு தனியாக ஒரு நிர்வாக பிரிவு உடனடியாக அமைக்க ஆணை வெளியிடப்படுகிறது. இந்நிர்வாக பிரிவுக்கு கீழ்க்கண்ட பணியிடங்களை புதியதாக தோற்றுவித்து இதன் மூலம் ஒப்பளிப்பு அளிக்கப்படுகிறது.

| வரிசை எண் | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | அலுவலக கண்காணிப்பாளர் | 1 | PB2 - 9300-34800+ Grade Pay 4800 |
| 2. | உதவியாளர் | 1 | PB1 - 5200-20200+ Grade Pay 2400 |
| 3. | இளநிலை உதவியாளர் | 1 | PB1 - 5200-20200+ Grade Pay 2000 |
| 4. | தட்டச்சர் | 1 | PB1 - 5200-20200+ Grade Pay 2000 |
| 5. | அலுவலக உதவியாளர் | 1 | PB1A- 4800-10000+ Grade Pay 1300 |
| | மொத்தம் | 5 (ஐந்து) | |